# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம்

**இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தைத் தாபிப்பதற்கும் ; இழப்புக்கான எதிரீடுகளுக்குத் தகவுடைய இன்னலுற்ற ஆட்களை அடையாளம் காண்பதற்கும்; அத்தகைய ஆட்களுக்குத் தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளை வழங்கும் ஏற்பாட்டிற்கென ஏற்பாட்டைச் செய்வதற்கும்; 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில் களையும் புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரால் 2018, யூலை மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, யூன் மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **255 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 25.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம்

ச.வ-ஓ. 12/2018

**இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தைத் தாபிப்பதற்கும் ; இழப்புக்கான எதிரீடுகளுக்குத் தகவுடைய இன்னலுற்ற ஆட்களை அடையாளம் காண்பதற்கும்; அத்தகைய ஆட்களுக்குத் தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளை வழங்கும் ஏற்பாட்டிற்கென ஏற்பாட்டைச் செய்வதற்கும்; 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ் வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங் களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பானது எல்லா இலங்கையர்களினதும் உள்ளார்ந்த கௌரவத்தை யும் சமமானதும் பராதீனப்படுத்தமுடியாததுமான மனித உரிமைகளையும் அத்துடன் இவ்வுரிமைகளுக்கு மதிப்பளித்து, பாதுகாத்து மற்றும் அவற்றை முன்னேற்றுவதற்கு அரசுக்குள்ள கடப்பாட்டையும் ஏற்றங்கீகரிக்கின்றதாதலாலும்;* முன்னுரை.

*அத்துடன் பயனுறு பரிகாரமொன்றுக்கான எல்லா இலங்கை யர்களினதும் உரிமைகளை நிலைநிறுத்திய எல்லாமடங்கியதான இழப்புக்கான எதிரீடுகள் திட்டமொன்று, எதிர்கால சந்ததியினர் உள்ளடங்கலாக, எல்லா இலங்கையர்களினதும் நல்வாழ்வுக் கான நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் பாது காப்புக்கும் பங்களிக்குமாதலாலும்;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இச்சட்டத்தின் குறிக்கோள்கள்.

**2**. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:-

(அ) இன்னலுற்ற ஆட்களுக்கு தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளை அளிப்பதற்கென இழப்புக் கான எதிரீடுகள் மீதான கொள்கைகளை வகுத்த மைத்தலும் அவற்றை அமைச்சரவைக்கு விதந்துரைத் தலும்;

(ஆ) பொதுக்கல்வி, நினைவேந்துகின்றமை பற்றியதும் மற்றும் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்குப் பலியாக்கப்பட்டோர் அத்துடன் அங்கவீனமுற்ற ஆட்கள் பற்றியதுமான விசேடித்த கொள்கைகள் உட்பட, அமைச்சரவையினால் அங்கீகரிக் கப்பட்டவாறாக, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அத்தகைய கொள்கைகளை இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் வசதிப்படுத்தலும் நடை முறைப்படுத்தலும்;

(இ) நல்லிணக்கத்தை இலக்காகக்கொண்ட வேறு பொறி முறைகளுடன், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் ஒத்தியல்பை உறுதிப்படுத்துவதற் கான இணைப்புக்களைத் தாபித்தல்; அத்துடன்

(ஈ) தகவுடைய இன்னலுற்ற ஆட்களுக்கு இழப்புக்கான எதிரீடுகளின் ஒப்படைப்புப் பற்றிய முன்னேற்றத்தை கண்காணித்தலும் மதிப்பீடுசெய்தலும்.

## பாகம் I

### இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தைத் தாபித்தல்

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தை தாபித்தல்.

**3.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் என அழைக்கப்பட வேண்டிய அலுவலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அதன் கூட்டிணைப்புப் பெயரில் வழக்குத்தொடுக்கலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அமைப்பு.

**4.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்புப் பேரவை, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்காக, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களிலிருந்து மூன்று பெயர்களை விதந்துரைத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் விதந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளராக சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களை நியமிப்பதற்காக விதப்புரைகளைச் செய்வதில், அரசியலமைப்புப் பேரவையானது பின்வருவன பற்றி கவனத்திற்கொள்ளுதல் வேண்டும் :-

(அ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அமைப்பு, பால்நிலை உள்ளடங்கலாக, இலங்கைச் சமூகத்தின் பல்லினத் தன்மையைப் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(ஆ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்கள் நேர்மையுள்ள ஆட்களாகவிருத்தலையும், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணிகளைப் புரிவதற்கு இயைபான அனுபவத்தையும், தகைமைகளையும் உடையவர்களாகவிருத்தலையும் உறுதிப்படுத்துதல்.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளரையும் உறுப்பினர்களையும் நியமித்தல்.

**5.** (1) சனாதிபதி, 4 ஆம் பிரிவின்கீழான விதப்புரைகளைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களைக்கொண்டவொரு காலப் பகுதியினுள், அத்தகைய ஆட்களை இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கான உறுப்பினர்களாகவும் அத்துடன் 4(2) ஆம் பிரிவின்கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்களிலிருந்து ஆளொருவரை தவிசாளராகவும் நியமித்தல் வேண்டும்.

(2) அத்தகைய பதினான்கு நாட்காலப்பகுதியினுள் சனாதிபதி அவசியமான நியமனங்களைச் செய்வதற்குத் தவறும்பட்சத்தில், அத்தகைய பதினான்கு நாட்கள் கொண்ட காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து பயனுறுவதாக -

(அ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப் பட்ட ஆட்கள், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்ட பெயர்களின் நிரலில் எந்த ஆளின் பெயர் முதலாவதாகக் காணப்படுகின்றதோ அந்த ஆள் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

அலுவலக உறுப்பினர்களின் பதவிக்காலம்.

**6**. இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் முன்னதாகப் பதவியை வறிதாக்கினாலொழிய, அத்தகைய உறுப்பினரின் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, அவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

உறுப்பினர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல்.

**7**. (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினரொருவரின் பதவி—

(அ) அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல்;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அத்தகைய உறுப்பினர் அத்தகைய பதவியிலிருந்து விலகுவதன்மேல்;

(இ) இதன் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மீது அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்; அல்லது

(ஈ) அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலம் முடிவுறுவதன் மேல்,

வறிதாதல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினரொருவர், அத்தகைய ஆள்-

(அ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் கடனிறுக்கவகையற்றவரெனத் தீர்க்கப்பட்டால்;

(ஆ) சபாநாயகரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் கலந்தாலோசனையுடன் செய்யப்பட்ட பிரதமரின் விதப்புரையின்மீது ஏற்படுத்தப்பட்ட சனாதிபதியின் அபிப்பிராயத்தில் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய

அலுவலகத்தின் உறுப்பினரொருவர் என்ற முறையில் அவரது கடமைகளுடன் முரண்படுகின்ற அக்கறை முரண்பாட்டைக் கொண்டுள்ளவரெனக் காணப்பட்டால்;

(இ) சுகவீனம் அல்லது வேறு உள அல்லது உடற்றகுதியீனம் காரணமாகப் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராகவிருந்தால்;

(ஈ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்டவொரு நீதிமன்றத்தினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்பட்டால்;

(உ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்; அல்லது

(ஊ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திலிருந்து முன்னனுமதியைப் பெறாமல் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருந்தால்,

சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(3) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(4) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அத்தகைய உறுப்பினரின் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) (அ) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையிலில்லாமை அல்லது அத்தகைய வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி, தவிசாளராகச் செயலாற்றுவதற்கென இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் வேறெவரேனும் உறுப்பினரை 4(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கலாம்.

(ஆ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையிலில்லாமை அல்லது அத்தகைய வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி, அத்தகைய காலப்பகுதியின்போது அத்தகைய உறுப்பினரிடத்திற் தற்காலிகமாகச் செயலாற்றவென வேறெவரேனும் தகைமைபெற்ற ஆளை 4(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கலாம்.

(6) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் ஏதேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் கூட்டங்கள்.

**8.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் ஏதேனும் கூட்டத்துக்கு தவிசாளர் வருகைதராதிருக்கையில், அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்துள்ள இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கு இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்தெடுத்தல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தலைமைதாங்குகின்ற தவிசாளர் அல்லது உறுப்பினர், தனது சொந்த வாக்குடன் சேர்த்து, அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அதன் கூட்டங்களை நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

*தகவல் அலுவலரும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரும்.*

**9**. இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணிகள் தொடங்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள், தம்முள்ளிருந்து அல்லது இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் வேறு எவரேனும் அலுவலரிலிருந்து, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய உறுப்பினரொருவரை தகவல் அலுவலராக நியமித்தல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் குறித்தளிக்கப்பட்ட அலுவலராகவிருத்தல் வேண்டும்.

*தலைமை அலுவலகமும் பிராந்திய அலுவலகங்களும்.*

**10**. (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் அமைதல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அதன் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்கும் இழப்புக்கான எதிரீடுகளை இன்னலுற்ற ஆட்கள் அணுகக்கூடியவையாக விருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமாகவுள்ளவாறாக காலத்துக்காலம், அத்தகைய எண்ணிக்கையிலான பிராந்திய, தற்காலிக அல்லது நடமாடும் அலுவலகங்கள், பிரிவுகள் மற்றும் வெளிச்சென்று சேவையளித்தற் கூறு உட்பட, கூறுகள் என்பவற்றைத் தாபிக்கலாம்.

## பாகம் II

## இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தத்துவங்களும் பணிகளும்

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தத்துவங்களும் பணிகளும்.

**11.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் பின் வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இன்னலுற்ற ஆட்களுக்கு செய்யப்படவேண்டிய இழப்புக் கான எதிரீடுகள் தொடர்பிலான விதப்புரைகளை (இதனகத்துப்பின்னர் ''காஆஅ'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித் தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அல்லது அத்தகைய வேறு இயை பான குழுக்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்;

(ஆ) இன்னலுற்ற ஆட்களிடமிருந்து அல்லது அத்தகைய இன்னலுற்ற ஆட்களின் பிரதிநிதிகளிடமிருந்து இழப்புக்கான எதிரீடுகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலும், இழப்புக்கான எதிரீடுகளுக்கான தகவுடைமையை மதிப்பீடுசெய்யும் நோக்கத்திற்காக அத்தகைய விண்ணப்பங்களின் உண்மைத்தன்மையைச் சரிபார்த்தலும்;

(இ) இழப்புக்கான எதிரீடுகளுக்குத் தகவுடையவராகவுள்ள இன்னலுற்ற ஆட்களையும் அவர்களது தேவையின் அளவையும் அடையாளம் காணுதல்;

(ஈ) மத்தியமயப்படுத்தப்பட்ட தரவுத்தளமொன்றினூடாக ஒத்த இழப்புக்கான எதிரீடு நிகழ்ச்சித்திட்டங்களின் மீதான ஏதேனும் செலவினமுட்பட, அரசினால் நிறை

வேற்றப்படும் முன்னைய அல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இழப்புக்கான எதிரீடு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை அடையாளம் காணலும் ஒன்றுதிரட்டுதலும்;

(உ) பின்வருவனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பயனுள்ளவகையிலான பணியாற்றுதலை உறுதிப்படுத்துவது தொடர்பாக விதிகளை ஆக்குதல்-

(i) எம்முறையில் விதப்புரைகளும் உரிமைக் கோரிக்கைகளும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமோ அம்முறை பற்றி;

(ii) எம்முறையில் அத்தகைய விதப்புரைகளும் உரிமைக்கோரிக்கைகளும் நிறைவேற்றவும் சரிபார்க்கவும்பட வேண்டுமோ அம்முறை பற்றி; அத்துடன்

(iii) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தை நிருவகித்தல் பற்றி;

(ஊ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் தொடர்பாக இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட்டொகுதியினரினால் பின்பற்றப்படவேண்டி உள்ளவையும், பால்நிலை மற்றும் சிறுவர் தொடர்பில் பதிலிறுக்கும் கொள்கைகளை உள்ளடக்கவேண்டியவையுமான விதிகளை ஆக்குதலும் வழிகாட்டுநெறிகளை காலத்துக்குக்காலம் வழங்குதலும்;

(எ) பின்வருவனவுட்பட, இழப்புக்கான எதிரீடுகள் மீதான கொள்கைகளையும் தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளை வழங்குதல் தொடர்பில் வழிகாட்டு நெறிகளையும் வகுத்தமைத்தல் மற்றும் அவற்றை அமைச்சரவைக்கு விதந்துரைத்தல்-

(i) *எந்த இன்னல்களுக்கு இழப்புக்கான எதிரீடுகள் கிடைக்கக்கூடியனவாகவிருக்குமோ அந்த இன்னல்களின் தன்மை மற்றும் பாரதூரத் தன்மை தொடர்பான கட்டளைக்கற்கள் உள்ளடங்கலாக, இன்னலுற்ற ஆட்கள் இழப்புக்கான எதிரீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகவுடைமை பற்றிய கட்டளைக்கற்கள்;*

(ii) *தகவுடைய இன்னலுற்ற ஆட்களுக்கு வழங்கப்படவுள்ள இழப்புக்கான எதிரீடுகளின் வடிவமும், தோதாகவுள்ளவிடத்து, அவற்றின் அளவும்;*

(iii) *நிதிசார் இழப்பீடுகளுக்கான இன்னலுற்ற ஆட்களின் தகவுடைமை பற்றிய கட்டளைக்கற்கள்;*

(iv) *அவசரமாகவுள்ள இழப்புக்கான எதிரீடுகளுக்கான இன்னலுற்ற ஆட்களின் தகவுடைமை பற்றிய கட்டளைக்கற்கள்;*

(v) *இன்னலுற்ற ஆட்களுக்கான இழப்புக்கான எதிரீடுகளின் வேறுபட்ட வடிவங்கள் பற்றிய ஏற்பாட்டில் அல்லது ஒப்படைப்பில் உதவக்கூடியவையான குழுக்கள் பற்றிய நிரல்;*

(vi) *வேறு அரச நிறுவனங்களினால் நேரடியாக வழங்கப்படற்பாலதான இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய விதப்புரைகள்;*

(vii) *இழப்புக்கான எதிரீடுகளுக்காக எக்கட்டளைக்கற்கள் மீது சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்கள் முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டுமோ அக்கட்டளைக்கற்கள்;*

(ஏ) அமைச்சரவையினால் அங்கீகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய இழப்புக்கான எதிரீடுகள் மீதான கொள்கைகளையும், வழிகாட்டுநெறிகளையும் நடைமுறைக்கிடுதல் மற்றும் இழப்புக்கான எதிரீடுகள் மீதான அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளி னாலும் வழிகாட்டுநெறிகளினாலும் எதிர்நோக்கப்பட்ட வாறு தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடு களை அளித்தல்;

(ஐ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட்டொகுதியினருக்கு பால்நிலை பதிலிறுத்தல் உள்ளடங்கலான பயிற்சியினை வழங்குதல்;

(ஒ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் முன்னர் தோன்றுகின்ற இன்னலுற்ற ஆட்களுக்கு அவசியப்படுகின்றவிடத்து, நிருவாக முறையிலான ஆதரவு, பிரயாண மீளளிப்புக்கள் மற்றும் உள சமூக ஆதரவு உட்பட ஆதரவை வழங்குதல்;

(ஓ) இன்னலுற்ற ஆட்களின் தனிப்பட்ட நேர்மைக்கான அச்சுறுத்தல் பற்றிய ஆக்கபூர்வமான மதிப்பீடொன் றிருப்பின், சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளின் உதவியு டன் பாதுகாப்பு வழங்குதல்;

(ஔ) இன்னலுற்ற ஆட்களுக்கு அவர்களின் உரிமைகள், இழப்புக்கான எதிரீடுகளைப் பெற்றுக்கொள்வதில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைமுறைகள், உண்மை நாடு கின்ற பொறிமுறைகள் மற்றும் அவர்கள் எந்த வேறு பொறிமுறைகளுக்கூடாக நிவர்த்தி அல்லது பரிகாரங் களைப் பெற்றுக்கொள்ளமுடியுமோ அந்த வேறு பொறிமுறைகள் என்பன பற்றி தகவல்களையும் மதி யுரையையும் வழங்குதல்;

(க) அதற்காக குறித்தொதுக்கப்பட்ட வளங்கள் கிடைக்கக் கூடியதற்கமைய, நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களுக்கு புனர்வாழ் வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைக்கு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கை களைக் கவனத்துட்கொள்ளுதலும் நடைமுறைப்படுத் துதலும்;

(ங) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் அமைச்சரவை யினால் அங்கீகரிக்கப்பட்ட, நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களுக்கு புனர்வாழ் வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையின் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை, அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுத்தப்படக்கூடியவாறான அத்தகைய காலம்வரை நடைமுறைப்படுத்தல்;

(ச) மீட்டளிப்பு, புனர்வாழ்வு, நிருவாகம் மற்றும் வேறு உதவிகளுட்பட வேறு ஆட்களினால் அல்லது ஆட்கள் குழுவினால் வழங்கப்பட்ட வேறு வடிவங்களிலான உதவியினதும் அத்துடன் சுகாதார சேவைகள், உள சமூக ஆதரவு, கல்விசார் மற்றும் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுட்பட நலன்புரிச் சேவைகளினதும் வழங்குகையை வசதிப்படுத்துதல்;

(ஞ) அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல் மற்றும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அல்லது அவர்களைப் பதவிவிலக்குதல்;

(ட) அரசாங்க அதிகாரிகளிடம் அல்லது வேறு எவையே னும் மூலங்களிடம் அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் அல்லது தகவல்களைக் கோருதல் உட்பட, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அவ்வலுவலகத்துக்கு அவசியமான தகவல்களைச் சேகரித்தல்;

(ண) இச்சட்டத்தில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கூறு அல்லது பிரிவிற்கு மேலதிகமாக, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பயனுள்ள நிருவாகத்துக்கும் பணியாற்றுகைக்கும் தேவைப்படுகின்றவாறான அத்தகைய குழுக்கள், பிரிவுகள் மற்றும் கூறுகளைத் தாபித்தல்;

(த) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமானவாறாகவுள்ள அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல்;

(ந) அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான உதவியை ஏதேனும் அரச, அரசாங்க, மாகாண அல்லது உள்ளூர் அதிகாரசபை அல்லது முகவரிடம் அல்லது அதன் எவரேனும் அலுவலரிடம் அல்லது வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்களின் குழுவிடம் கோருதல் அல்லது பெற்றுக்கொள்ளுதல்;

(ப) இன்னலுற்ற ஆட்களுக்கு அளிக்கப்படவுள்ள இழப்புக்கான எதிரீடுகள் தொடர்பில் செய்யப்பட்ட விதப்புரைகள் சம்பந்தமான எல்லா விபரங்களையும் உள்ளடக்கும் தரவுத்தளமொன்றை உருவாக்குதலும், முகாமை செய்தலும், பேணுதலும். அத்தகைய தரவுத்தளம் வேறு எவரேனும் அரச அதிகாரிகளினால் அல்லது முகவரினால் முன்னர் வழங்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய விபரங்களை உள்ளடக்குதலும் வேண்டும்;

(ம) இழப்புக்கான எதிரீடுகளுக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் நிலைமைபற்றி இன்னலுற்ற ஆட்களுக்கு அல்லது அத்தகைய இன்னலுற்ற ஆட்களின் பிரதிநிதிகளுக்கு காலத்துக்குக்காலம் அறிவித்தலும், அத்தகைய விண்ணப்பங்களின் முன்னேற்றம் தொடர்பிலான வினாக்களுக்கு உரிய நேரத்தில் பதிலளித்தலும்;

(ய) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கூடாக தகவுடைய இன்னலுற்ற ஆட்களுக்கு எதிரீடுகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படவேண்டியதும் இவ் வலுவலகத்தைத் தொழிற்படுத்துவதில் பயன்படுத் தப்படவேண்டியதுமான நிதிகளை முகாமை செய்தல்; அத்துடன்

(ர) அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோ கிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அல்லது அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அத்த கைய வேறெல்லாச் செயல்களையும் செய்தல்.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய வகுத்தமைத்தல்.

**12.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகமானது, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய கொள்கைகளை வகுத்தமைப் பதிலும் வழிகாட்டுநெறிகளை வழங்குவதிலும் பின்வருவனவற் றைச் செய்தல் வேண்டும்:-

(அ) தோதான முறைகளுக்கூடாக, இன்னலுற்ற ஆட்கள், இன்னலுற்ற ஆட்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒழுங்கமைப்புக்கள் மற்றும் வேறு எவரேனும் அதிகாரி, ஆள் அல்லது ஆட்களின் குழுவுடன் கலந்தாலோ சித்தல்;

(ஆ) பால்நிலைசார் பதிலிறுத்தல் மற்றும் பெண்கள், சிறுவர் கள் அத்துடன் அங்கவீனமுற்ற ஆட்களாகவுள்ள இன்னலுற்ற ஆட்களின் குறிப்பான தேவைகள் என்பன தொடர்பில் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவல கத்துக்கு மதியுரை வழங்குவதற்கான இயைபான நிபுணத்துவத்தைக் கொண்ட மதியுரைஞர்கள் எல்லா நேரங்களிலும் கிடைக்கக்கூடியமையை உறுதிப்படுத் துதல்;

(இ) பாரபட்சமின்மை, பலிக்குள்ளாக்கப்பட்டோரை மையப்படுத்தல் மற்றும் நியாயத்தன்மை பற்றிய

கோட்பாடுகளினாலும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் அங்கவீனமுற்ற ஆட்கள் பற்றி முறையான கவனஞ் செலுத்தியும் வழிகாட்டப்படுதல் வேண்டும்;

(ஈ) பின்வருவனவுட்பட, இயைபான எல்லாக் காரணிகளுக் குமான முறையான கவனத்தைக் கொண்டிருத்தல் :-

(i) இன்னலுற்ற ஆட்களின் உரிமைகளின் மீறுகை யின் பாரதூரமான தன்மை;

(ii) தொடர்ச்சியான உடல்சார், உளவியல்சார் மற்றும் பொருளாதாரரீதியிலான தாக்கம் உட்பட, இன்னலுற்ற ஆட்கள் மீதான அத்த கைய மீறுகையின் தாக்கம்;

(iii) பெண்கள், சிறுவர்கள் மற்றும் அங்கவீனமுற்ற ஆட்கள் உட்பட, பாதிக்கப்படும் சாத்தியமுள்ள இன்னலுற்ற ஆட்களுக்கான விசேட வழிமுறை களை வழங்குவதற்கான தேவை;

(iv) சம்பந்தப்பட்ட உரிமை மீறுகை தொடர்பில், இன்னலுற்ற ஆட்களினால் ஏற்கனவே பெறப் பட்ட இழப்புக்கான எதிரீடுகளுக்குக் கணக்குக் காட்டுவதற்கான தேவை;

(v) பணவகையினவான இழப்புக்கான எதிரீடு களை அளிக்கும் விடயத்தில், வளங்கள் கிடைக் கக்கூடியமை உட்படவும், திரண்ட பணத் தொகையிலான கொடுப்பனவுகளுக்கும் சிறியள விலான கொடுப்பனவுகளுக்கும் இடையிலான

துட்பட, கொடுப்பனவுகளின் முறையை முடிபு செய்வதிலும் இன்னலுற்ற ஆட்களின் மிகச் சிறந்த அக்கறைகளாகக் கருதப்படவேண்டிய காரணிகள்;

(vi) பணவகையில்லாதனவான இழப்புக்கான எதிரீடுகளின் தோதானதன்மை;

(vii) பணவகையினவாகவுள்ள தனியான இழப்புக் கான எதிரீடுகளை வழங்குவதில், அத்தகைய இழப்புக்கான எதிரீடுகள், மிகப் பாரதூரமான இன்னலைக் கொண்டுள்ள இன்னலுற்ற ஆட்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதற்கான தேவை;

(viii) இன்னலுற்ற ஆட்களின் உரிமை மீறுகையின் கடுமையானதன்மையையும், இன்னலுற்ற ஆட்களின் மிகுவறுமையையும் அத்துடன் வளங்களின் கிடைக்கக்கூடிய தன்மையையும் கருத்திற்கொண்டு, பணவகையினவான இழப்புக்கான எதிரீடுகளின் வழங்குகையை முன்னுரிமைப்படுத்துவதற்கான தேவை;

(ix) இறந்துள்ள அல்லது காணாமற்போயுள்ள ஆளொருவர் தொடர்பில் பல உறவினர்கள் உரிமைக்கோரிக்கைகளைச் செய்யுமிடத்து, பகிர்ந்தளிப்புத் திட்டமொன்றை வகுத்த மைப்பதற்கான தேவை;

(உ) கூட்டான இழப்புக்கான எதிரீடுகளின் விடயத்தில், பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கான தேவை யைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(i) பாரபட்சமின்மை, நல்லிணக்கத்தை வசதிப் படுத்தல் மற்றும் எல்லா இன்னலுற்ற ஆட்களினதும் அனுபவங்களைக் கூர்ந்தறிதல்;

(ii) அத்தகைய இழப்புக்கான எதிரீடுகளின் வடிவம், இயைபான இன்னலுற்ற ஆட்கள் மற்றும் இன்னலுற்ற ஆட்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒழுங்கமைப்புக்கள் மற்றும் வேறு எவரேனும் அதிகாரி, ஆள் அல்லது ஆட்களின் குழுவுடனான கலந்தாலோசனையின் மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இழப்புக்கான எதிரீடுகளைப் பெற்றுக்கொள்ளுதலானது, இன்னலுற்ற ஆட்களை அத்தகைய ஆட்களின் உரிமைகளை மீறியிருக்கக்கூடிய எவரேனும் ஆளுக்கெதிராக, அத்தகைய ஆட்களுக்கு சட்டத்தில் கிடைக்கக் கூடியதாகவுள்ள ஏதேனும் பரிகாரத்தை பின்தொடர்வதைத் தடை செய்தலாகாது என குறிப்பாக ஏற்பாடு செய்யப்படுகின்றது.

(3) இன்னலுற்ற ஆட்களுக்கு வேறு எவரேனும் தோதான அதிகாரி, ஆள் அல்லது ஆட்களின் குழு முன்னிலையில் தோன்றுவதற்கான அவர்களின் இயலுமைபற்றி இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அலுவலக வெளிப்புறக் கூறினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அத்தகைய நிறுவனங்களின் முன்னிலையில் தோன்றியுள்ள இன்னலுற்ற ஆட்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதில், அத்தகைய ஆட்கள் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனரா என்பதைப் பொருட்படுத்தாது, காஆஅ மற்றும் வேறு இயைபான நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டும்.

**13.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், அலுவலரும் மற்றும் சேவையாளரும் இச்சட்டத்தின் கீழான தமது தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தல் மற்றும் புரிவதிற்றவிரவும், அத்தகைய தகவலை வழங்கும் ஆளினால் அந்தரங்கத்தன்மையின் தேவைப்பாடு விட்டுக்கொடுக்கப்படுகின்ற அளவுக்குத் தவிரவும், இரகசியமாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக அந்தரங்கத்தன்மையைப் பேணிப்பாதுகாத்தலும் பேணிக்காப்பதில் உதவுதலும் வேண்டும். அந்தரங்கத் தன்மை.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அதன் எல்லாத் தரவுத்தளங்களினதும் தரவுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தொழில்நுட்பப் பாதுகாப்புகளுட்பட, அவசியமான எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.

## பாகம் III

### செயலகம்

**14.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், செயலகமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் பொறுப்பு அதற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். செயலகம்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும்; அவர், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(3) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் அதற்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் நியமிக்கப்படலாம்.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

**15.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரதும் சம்மதத்துடன், இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட் டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதை யொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தர மாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### நிதி மற்றும் அறிக்கையிடல்

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் நிதியம்.

**16.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகமானது, அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் நிதியத்திற்கு பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில் களையும் புனரமைத்தல் சட்டத்தின் நியதிகளின்படி, ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும்புனரமைத்தல் அதிகாரசபைக்குச் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில், இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று, ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில் களையும் புனரமைத்தல் அதிகாரசபையின் வரவுக் கிருக்கின்றனவான அத்தகைய எல்லா மீதிகளும்;

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) உள்நாட்டிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ் சரி, நன்கொடைகள், மானியக்கொடைகள் அல்லது கொடைகள் என்றவகையாக இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், எல்லா வெளிநாட்டு நிதிகளும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப் படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தை நிருவகிப்பதிலும் செயற்படுத்துவதிலும் உறப்பட்ட ஏதேனும் செலிவனத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் அத்துடன் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டும் என இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் அல்லது ஏற்பாட்டின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களது சம்பளங்கள்.*

**17**. இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப் பினர்களது சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப் படுதல் வேண்டுமென்பதுடன், திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக் கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவர்களின் பதவிக்காலங் களின்போது குறைக்கப்படுதலுமாகாது.

நிதியாண்டு.

**18.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

அறிக்கையிடுதல்.

**19.** இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம், அதன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் உட்பட, வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஒருமாத காலப்பகுதிக்குள், அத்தகைய அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படுவதைச் செய்வித்தலும் வேண்டும்.

## பாகம் V

## பொது

தவறுகள்.

**20.** (1) எவரேனுமாள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவ்வாளை தவறான முறையில் எதிர்த்தால் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிட்டால்; அல்லது

(ஆ) இழப்புக்கான எதரீடுகள் பற்றிய அலுவலகம் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் அதற்கு தவறான முறையில் தடங்கல் செய்தால் அல்லது முட்டுக்கட்டையிட்டால்; அல்லது

(இ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கினால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக எவையேனும் அந்தரங்கமான தகவல்களை வெளிப்படுத்தினால்;

அத்தகைய ஆள் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறொன்றை ஆளொருவர் புரிந்துள்ளாரென நம்புவதற்கு இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் அத்தகைய விடயத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும். இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொவ்வொன்றும், அது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கெதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்றாற்போன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

வழக்குக்கெதிரான பாதுகாப்பு.

**21.** (1) இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு சேவையாளருக்கு எதிராக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எச்செயல் தொடர்பிலும் குற்றவியல் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலோ அல்லது பேணப்படுதலோ ஆகாது.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அல்லது இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் ஆலோசகரின் ஏதேனும் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை பற்றி அரசியலமைப்பின் 126 ஆம் அல்லது 140 ஆம் உறுப்புரையின் கீழான வழக்குநடவடிக்கைகளில் வினவப்படலாம்.

(3) உட்பிரிவு (2)இன் ஏற்பாடுகளுக்கிணங்க, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு, எதிராக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எச்செயல் தொடர்பிலும் குடியியல் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலோ அல்லது பேணப் படுதலோ ஆகாது.

(4) ஓராம், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத் துக்கு நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினரினால் அல்லது அலுவலரினால், சேவையாளரினால் இச்சட்டத்தின்கீழ் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென அல்லது செய்யாதுவிடப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய வழக்கு நடவடிக்கையில் அத்தகைய செலவு அவ்வாளிடமிருந்து அறவிடப்பட்டாலொழிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**22.** (1) எந்தக் கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டு மென்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமங்களுக்காக இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் விதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் பாராளு மன்றத்தின் முன் இடப்படுதல் வேண்டுமென்பதுடன் மூன்று மாதங்களை விஞ்சாத நியாயமானவொரு காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(3) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய கொள்கைகளும் மற்றும் வழிகாட்டுநெறிகளும் பாராளுமன்றத்தின் முன் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், மூன்று மாதங்களை விஞ்சாத நியாயமானவொரு காலப்பகுதியி னுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், நிதிகளின் செலுத்தீட்டை அதிகாரமளிக்கின்ற இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய கொள்கைகளும் வழிகாட்டு நெறிகளும் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், மூன்று மாதங்களை விஞ்சாத நியாயமான வொரு காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அத்த கைய கொள்கைகளும் வழிகாட்டுநெறிகளும் அத்தகைய அங்கீ காரத்தின் பின்னர் மாத்திரமே பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் முதலியோர் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**23.** (1) (இச்சட்டத்தின்கீழ் அவர்களின் பணிகளின் வரையறுக்கப் பட்ட நோக்கத்திற்காக) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத் தின் உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினதும், (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தினதும், மற்றும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தினதும் நோக்கங்களுக் காக பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*தத்துவங்களைக் கையளித்தல்.*

**24.** (1) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகமானது, அதன் தத்துவங்கள் மற்றும் பணிகள் என்பவற்றுள் எதனையும் அதன் பிரதம நிறைவேற்று அலுவலருக்கு, அல்லது வேறு எவரே னும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) எந்த பிரதம நிறைவேற்று அலுவலருக்கு, உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலு வலகத்தின் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எதுவும் கையளிக்கப்பட்டுள்ளதோ, அந்த பிரதம நிறைவேற்று அலுவலர், உறுப்பினர் அல்லது அலுவலர் அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பொதுவான அல்லது குறிப்பான பணிப்புகளுக்கு அமைவாகப் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

வேறு எவரேனும் ஆளுக்கு குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பு இருத்தலாகாது.

**25**. எவரேனும் இன்னலுற்ற ஆட்களிடமிருந்து அல்லது அத்தகைய இன்னலுற்ற ஆட்களின் பிரதிநிதிகளிடமிருந்து ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றுக்கவனித்தல் அல்லது அவர்களுக்கு இழப்புக்கான எதிரீடுகளை வழங்குதலானது வேறு எவரேனுமாளுக்கு குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பை விளைவித்தலாகாது.

பேணல்களும் நிலை பெயர்கால ஏற்பாடுகளும்.

**26**. (1) (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "நீக்கப்பட்ட சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டமானது இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்-

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று உள்ளவையுமான ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையின் கோப்புகள், பதிவேடுகள், ஆவணப்படுத்துகை கணிணிகள், தரவு களஞ்சியப்படுத்தும் சாதனங்கள் உட்பட எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு உரித்தாதல் வேண்டும்.

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று உள்ளவையுமான ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியில் பயனுறும் வகையில் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் அல்லது அலுவலகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாக மற்றும் உடன்படிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) (i) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் தொழில் முனையப்படுகின்றவர்களும் அத்துடன் அத்தகைய தொழிலை ஏற்றுக்கொள்ளுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துகின்றவர்களுமான நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையில் அவர்களது தொழில் நியதிகளைவிட அனுகூலம் குறைந்தளவாகவிராத நியதிகள் மீது தொழிலுக்கு அமர்த்தப்படுதல் வேண்டும்.

(ii) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர்:-

(அஅ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் தொழிலை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான விருப்பமொன்றை வெளிப்படுத்து கின்றவிடத்து; அல்லது

(ஆஆ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் தொழிலை ஏற்றுக்கொள்வதற்கான விருப்பமொன்றை வெளிப்படுத்துகின்றவிடத்து, ஆனால் ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையில் அவரது தொழிலில் அவரால் நிறைவேற்றப்பட்ட சேவைகளின் தன்மையின் நோக்கில், அவர் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் பணியாட்டொகுதியில் சேர்த்துக்கொள்ளப்பட முடியாது எனில்,

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தன்னிச்சை யான ஓய்வூதிய திட்டம் ஒன்றின் நியதிகளின்படி நட்ட ஈடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(iii) இழப்புக்களுக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் ஊழியர் கோப்பு மற்றும் சம்பளங்கள் தொடர்பாக இயைபான அதிகாரசபையினால் தோதான தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதான அத்தகைய காலம் வரை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங் களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையின் ஊழியர் கோப்பு மற்றும் சம்பளங்கள் தொடர்பில் செய்யப்பட்டதும் நிலவு கின்றதுமான அங்கீகாரங்கள் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் ஊழியக் கோப்பு மற்றும் சம்பளங்கள் பற்றிய அங்கீகாரம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப் பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறா திருக்கின்றமையுமான ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராக தொடுக் கப்பட்ட எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் விடயத்திற்கேற்ப இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்டு இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் அல்லது அலுவலகத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் மற்றும் வழக்கு நடவடிக்கை களாக கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க தொடர்ந்து பூர்த்தி செய்யவும்படலாம்.

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப் பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கொடுத்துத் தீர்க்கப்படாது எஞ்சியிருக்கின்றது மான ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும்

கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைக்கு சாதகமாக அல்லது அதற்கெதிராக செய்யப்பட்ட தீர்ப்புகள் மற்றும் கட்டளைகள் யாவும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்டு இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு சாதகமாக அல்லது அதற்கெதிராக செய்யப்பட்ட தீர்ப்புகளாகவும் கட்டளைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதும் அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்.

(ஊ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளான்று நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைக்கு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் யாவும் மற்றும் அதனால் தொடங்கப்பட்ட எல்லா நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அதன் பின்னரும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு செய்யப்பட்ட உரிமைக்கோரிக் கைகளாகவும் அதனால் தொடங்கப்பட்ட எல்லா நிகழ்ச்சித்திட்டங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்; என்பதுடன்

(எ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத் தல் அதிகாரசபையின் அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், கடன்கள் மற்றும் பொறுப்புகள் யாவும் இச்சட்டம் தொடங்கும் தேதியன் றும் அதன்பின்னரும் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அக்கறைகளாக, உரிமைகளாக, சொத்துக்களாக, கடப்பாடுகளாக, கடன்களாக மற்றும் பொறுப்புக்களாதல் வேண்டும்.

**27.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய - பொருள் கோடல்.

"இன்னலுற்ற ஆட்கள்" என்பது -

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற மோதலின்போது, அதன் விளைவாக, அல்லது அதனுடன் தொடர்புடைய, அல்லது அதன் பின்னரான; அல்லது

(ii) அரசியல் அமைதியின்மை அல்லது குடியியல் குழப்பங்களுடன் தொடர்புடைய; அல்லது

(iii) இலங்கையிலுள்ள தனியாட்களின், குழுக்களின் அல்லது மக்கள் சமுதாயங்களின் உரிமைகள் மீதான முறைமைப்படுத்தப்பட்ட முழுமையான மீறுகைகளின் போது; அல்லது

(iv) 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வலுக் கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டத்தில் வரைவிலக் கணங்கள் கூறப்பட்டவாறு வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலொன்றின் காரணமாக,

ஏற்புடையற்பாலவாறு (1949 ஆம் ஆண்டின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது ஜெனீவா சமவாயங்களில் அடங்கியுள்ளவாறாக) மனித உரிமைகள் பற்றிய அல்லது மனிதாபிமானச் சட்டம் பற்றிய மீறுகை யொன்றையுற்றிருந்த ஆட்கள்;

(ஆ) பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் இறந்த ஆளொருவரின் அல்லது காணாமற்போன ஆளொருவரின் உறவினர்கள்,

எனப் பொருள்படும்.

"கூட்டான இழப்பீட்டுக்கான எதிரீடுகள்" என்பது, சமுதாயங்களுக்கான அல்லது இன்னலுற்ற ஆட்களின் குழுக்களுக்கான அல்லது அத்தகைய இன்னலுற்ற ஆட்களின் உறவினர்களுக்கான பயனுள்ளவொரு பரிகாரத்துக்கும் நலன்களுக்குமான உரிமையை ஏற்றங்கீகரிக்கக் கருதப்படுகின்றவாறான அத்தகைய வழிமுறைகள் எனப்பொருள்படுவதுடன், அவை பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்-

(அ) நினைவுச் சின்னங்கள் உட்பட, இறந்த ஆட்களை நினைவூட்டிக் கொள்ளும் வழிவகைகள்;

(ஆ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி;

(இ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்;

(ஈ) சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது சேவைகள்; அத்துடன்

(உ) பாதிக்கப்பட்ட சமுதாயங்களுடனான கலந்தாலோசனையில் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தினால் அடையாளங் காணப்பட்டவாறான வேறு தோதான நிகழ்ச்சித்திட்டங்கள்;

"மனித உரிமைகள்" என்பது, அரசியலமைப்பினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட எல்லா அடிப்படை உரிமைகளும், இலங்கையினால் ஏற்புறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் பொருத்தனைகளுக்கு பயன்கொடுப்பதற்காக சட்டமாக்கப்பட்ட பாராளுமன்றச் சட்டங்களில் அடங்கியுள்ள உரிமைகளும் எனப்பொருள்படும்;

"தனியான இழப்பீட்டுக்கான எதிரீடுகள்" என்பது, தனியான இன்னலுற்ற ஆளொருவருக்கான அல்லது இன்னலுற்ற ஆளொருவரின் உறவினர்களுக்காக பயனுள்ளவொரு பரிகாரத்துக்கும் நலன்களுக்குமான உரிமையை ஏற்றங்கீகரிக்கக் கருதப்படுகின்றவாறான அத்தகைய வழிமுறைகள் எனப்பொருள்படுவதுடன், பின்வருவன வற்றையும் உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) இன்னலுற்ற ஆளொருவருக்கு அல்லது அத்தகைய இன்னலுற்ற ஆளின் உறவினர்களுக்கு வழங்கப் பட்ட ஏதேனும் பணவகையிலான கொடுப்பனவு அல்லது பொருள்வகையிலான தன்மை;

(ஆ) நுண்நிதியும் சலுகைமுறையிலான கடன்களும்;

(இ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்;

(ஈ) நிருவாகமுறையிலான உதவியும், இன்னலுற்ற ஆளொருவருக்கு அல்லது அத்தகைய இன்ன லுற்ற ஆளொருவரின் உறவினர்களுக்கு வழங்கப் பட்ட உளசமூக ஆதரவுட்பட நலனோம்புச் சேவை களும்;

(உ) காணி மற்றும் வீடமைப்பு பற்றிய ஏற்பாடு உட்பட, மீட்டளிப்பு வழிமுறைகள்; அத்துடன்

(எ) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத் தினால் அடையாளங்காணப்பட்ட வேறு தோதான வழிமுறைகள்;

அத்தகைய இன்னலுற்ற ஆள் தொடர்பிலான "உறவினர்கள்" என்பது, பின்வரும் ஆட்களை உள்ளடக்கும் :-

(i) வாழ்க்கைத்துணை;

(ii) பிள்ளைகள்;

(iii) பெற்றோர்கள்;

(iv) சகோதரன்மார் அல்லது சகோதரிமார்;

(v) மாமனார், மாமியார், மச்சான்மார்/மச்சாள்மார், மருமகன்மார்/ மருமகள்மார்;

(vi) பேரப்பிள்ளைகள் மற்றும் தாத்தாமார், பாட்டிமார்

"இழப்புக்கான எதிரீடுகள்" என்பது, தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளை உள்ளடக்கும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***28***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.